இணைப்பு-I

(568 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 5

முத்திரைத்தாள் நிருவாகம்

கொள்கை விளக்கக் குறிப்பு

1. பொது

சொத்து விற்பனை, பரிவர்த்தனை, அடமானம், நன்கொடை, உடைமை உரிமை நிலவர ஏற்பாடு முதலியவை குறித்த பத்திரங்கள் மீது முத்திரைத் தீர்வை விதிப்பதற்கு 1899-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டம் (மத்தியச் சட்டம் 2/1899) மாநில அரசுக்கு அதிகாரமளிக்கிறது. வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட பின்பு, பதிவுத்துறைத் தலைவர் 1-12-1980லிருந்து வருவாய் கட்டுப்பாட்டுத் தலைமை அதிகாரியாக (முத்திரைத்தாள் வருவாய்) செயல்பட்டு வருகிறார். அவர் இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின் மூலம் அரசுக்கு கிடைக்க வேண்டிய வருவாய் வசூலிக்கும் தொகுப்பிலும் இருந்து வருகிறார். அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை மாற்றம் செய்வது குறித்த ஆவணங்களின் பேரில் முத்திரைத்தாள் தீர்வை விதிப்பதன் மூலம் கணிசமான வருவாய் கிடைக்கிறது.

2. முத்திரைத் தாள்களின் தேவையைக் கணித்தலும், முத்திரைத் தாள்களை வழங்கலும்

தமிழ்நாடு முழுவதற்கும் அஞ்சல் சாரா முத்திரைத்தாள்களான நீதித்துறையைச் சார்ந்த முத்திரைத் தாள்கள், நீதித்துறையை சாரா முத்திரைத் தாள்களின் தேவையை முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் மதிப்பீடு செய்து அதனை நாசிக்கிலுள்ள இந்திய பாதுகாப்பு அச்சக முத்திரைத் தாள் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அனுப்பி வைக்கிறார். சென்னையிலுள்ள கருவூலக் கணக்குகள் துறை மண்டல துணை இயக்குநர், முத்திரைத்தாள் உதவி கண்காணிப்பாளர் ஒருவரின் உதவியுடன் அலுவல் முறையில் முத்திரைத்தாள் கண்காணிப்பாளராக செயல்படுகிறார். முத்திரைத்தாள்களின் ஆண்டு மற்றும் காலாண்டிற்கான தேவைப் பட்டியலை மாவட்ட கருவூல அதிகாரிகளும், முத்திரைத்தாள் உதவி கண்காணிப்பாளரும்

தயாரிக்கின்றனர். அவற்றை முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் ஒருங்கிணைக்கிறார். வெவ்வேறு கருவூலங்களிலிருந்து முத்திரைத்தாள்களின் இருப்பு நிலவரப்படியும், பொது மக்களுக்கு தேவைப்படும் அனைத்து விதமான மதிப்புகளைக் கொண்ட முத்திரைத்தாள்களை வழங்கும் நோக்குடன், பொதுமக்களின் தேவை திடீரென அதிகரிக்கும்போது .அத்தேவையை நிறைவு செய்யும் வகையிலும் சென்னை முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் ஒருங்கிணைந்த முத்திரைத்தாட்கள் தேவைப்பட்டியலை தயாரிக்கிறார். குறிப்பிட்ட மதிப்புடைய முத்திரைத் தாட்கள் அவசரமாகத் தேவைப்படும்பொழுதும், பற்றாக்குறை ஏற்படும்போதும், அம்முத்திரைத் தாட்களை இருப்பு வைத்துள்ள ஒரு மாவட்டத்திலிருந்து இருப்பு இல்லாத மற்ற மாவட்டத்திற்குத் தேவையான முத்திரைத் தாட்களை மாற்ற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

தற்போது ரூ. 25,000/-, ரூ. 20,000/-, ரூ.10,000/-, ரூ. 5,000/- மற்றும் ரூ.20/- வகையிலான கூடுதல் நீதிசாரா முத்திரைத்தாட்கள் வெளியிடப்பட்டுள்ளது.

3. உரிமம் பெற்ற முத்திரைத் தாட்கள் விற்பனையாளர்கள்

உரிமம் பெற்ற முத்திரைத் தாள் விற்பனையாளர்கள் மூலமும், கருவூலங்கள், சார்பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவற்றின் வாயிலாகவும், பொது மக்களுக்கு முத்திரைத் தாட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் சென்ற ஆண்டில் 3482 முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் இருந்தனர். தற்போது, 3519 உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் உள்ளனர். முத்திரைத்தாள் விதிகளில் குறிப்பிட்டவாறு உரிமம் பெற்ற முத்திரைத் தாள் விற்பனையாளர்களுக்கு தரகுத் தொகை வழங்கப்படுகிறது.

முத்திரைத்தாள் விற்பனையாளர்களின் செயல்பாட்டினை மாவட்டப் பதிவாளர்களும் பதிவுத்துறை உயர் அதிகாரிகளும், மேற்பார்வை செய்து முறைப்படுத்துகின்றனர். . செயற்கையாக ஏற்படுத்தப்படும் முத்திரைத்தாள் தட்டுப்பாட்டை தவிர்க்க சிலவகை பத்திரங்களைப் பொறுத்த மட்டில் முத்திரைத் தாள்களுக்குப் பதிலாக ரொக்கம் பெற்று சான்று சேர்க்க சார்பதிவாளர்களுக்கு அதிகாரம் அளிக்கப் பட்டுள்ளது. அத்துடன் முத்திரைத் தாட்கள் தாராளமாகக் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், மாநிலம் முழுவதும் உள்ள

1996 ஆகஸ்ட் 10]

அனைத்து பதிவு அலுவலகங்களிலும் முத்திரைத்தாள் விற்பனைக்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது. பொதுமக்கள் அவர்களுடைய பத்திரங்களில் முத்திரை வில்லைகள் ஒட்ட உதவும் வகையில், அனைத்து சார் பதிவாளர் அலுவலகங்களிலும் சிறப்பு ஒட்டு வில்லைகள் எப்போதும் கிடைக்கிறது.

4. வருவாய்

முத்திரை வருவாய்

வருடம்	பத்திரப் பதிவு அதிகாரிகள் மூலம் (ஆவணப் பதிவின் மூலம்)	முத்திரைத்தாள்கள் கண்காணிப்பாளர் மூலம் விற்பனை (நீதி சாரா முத்திரைத் தாள்கள் அல்லாததின் மூலம்)
	(ரூபாய் கோடியில்)	
1992–93	*367.81*	*31.75*
1993–94	*411.98*	*29.90*
1994–95	*586.34*	*29.11*
1995–96	*748.50*	*30.93*

5. வழிகாட்டி மதிப்பு மறு நிர்ணயம்

சொத்துரிமை மாற்றம், சொத்து பரிமாற்றம், தானம், விடுதலை, செட்டில்மெண்ட், நிலையான குத்தகை, உடைமை உரிமையிலுள்ள அடமானம் ஆகியவை போன்ற அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் பரிமாற்ற ஆவணங்கள் மூலம் கிடைக்கும் வருவாய் முத்திரைத் தீர்வை வருமானத்தில் கணிசமான அளவாகும். சொத்து விற்பனை பரிமாற்றம், தானம், குடும்ப உறுப்பினர் அல்லாத நபர்கட்கான செட்டில்மெண்ட் குறித்த பரிவர்த்தனைகளில் சம்பந்தப்பட்ட சொத்தின் சந்தை மதிப்பு அடிப்படையில் முத்திரைத் தீர்வை விதிக்கப்பட்டு வருகிறது. பத்திரத்தில் சந்தை மதிப்பு சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்யும் நோக்குடன் பத்திரப் பதிவு அலுவலர்களுக்கு அவர்களது அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள சொத்தின் தோராய மதிப்பு குறிக்கப்பட்டுள்ள வழிகாட்டி மதிப்புப் பதிவேடு பராமரிக்கப்படுகிறது.

வளர்ச்சி சதவீதம், விற்பனை புள்ளி விவரம், நிலத்தின் உபயோகம், பூகோள அமைப்பு, தெருக்களின் அகலம் மற்றும் விசாரணையின் மூலம் அறியப்படும் மதிப்பு ஆகிய விவரங்களைக் கொண்டு வழிகாட்டி மதிப்புகள் திருத்தி அமைக்கப்படுவதற்கு ஒரு கூடுதல் பதிவுத்துறைத் தலைவரின் கீழ் 'வழிகாட்டி மதிப்புக்குழு' இயங்கி வருகிறது. இக்குழு வழிகாட்டிப் பதிவேடுகளில் உள்ள மதிப்பு விவரங்களில் உள்ள முரண்பாடுகள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து முறையீடுகளின் அடிப்படையில் கள ஆய்வும் விசாரணையும் மேற்கொண்டு முரண்பாடுகளைச் சரி செய்கிறது. நகரங்களுக்கு அருகாமையிலுள்ள நிலங்களும் நஞ்சை நிலங்களும், விவசாய புறம்போக்கு நிலங்களும், தரிசு நிலங்களும் வீட்டு மனைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. இவ்வழிகாட்டிக் குழு துறையிலுள்ள களப்பணி அலுவலர்களுடன் சேர்ந்து மனைப் பிரிவுகளையும், மனையிடங்களையும் ஆய்வு செய்தும், விசாரணையின் மூலமும் பதிவு புள்ளி விவரங்கள் அடிப்படையிலும் சரியான மதிப்பை நிர்ணயம் செய்கிறது. மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் நகரியங்கள் பகுதிகளிலும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளுக்கும், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சி மற்றும் இதர நகராட்சிகளில் 1971-ஆம் ஆண்டு கிராம மற்றும் நகர்ப்புற திட்ட சட்டத்தின் பிரிவு 10(1)-இன் கீழ் 'உள்ளாட்சி திட்டப் பகுதி' என அறிவிக்கப்பட்ட பகுதிகளிலும் உள்ள சொத்துக்களின் வழிகாட்டி மதிப்பு ஆண்டுதோறும் திருத்தியமைக்கப்படவும், இதர கிராமப் புறங்களிலுள்ள சொத்துக்களின் மதிப்பு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படவும் தற்போது அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. 31-3-1996 வரை 114 மேல் முறையீடு வழக்குகளும், 1888 மதிப்பு நிர்ணய வழக்குகளும் முடிக்கப்பட்டுள்ளன. மாநகராட்சிகள், அனைத்து நிலை நகராட்சிகள் மற்றும் 634 நகர பஞ்சாயத்துக்குட்பட்ட கிராமங்களின் வழிகாட்டி பதிவேடு மதிப்பு இந்த ஆண்டு ஏப்ரலில் திருத்தியமைக்கப்பட்டதால் நடப்பு ஆண்டில் சுமார் 100 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிடைக்கும். வழிகாட்டி மதிப்பை சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்கள் கோரினால், தெரிவிக்க அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளது.

6. துறையின் வருவாய் வசூல்:

பத்திரப் பதிவுக் கட்டணம், முத்திரைத்தாள் தீர்வை ஆகியவற்றின் மூலம் 1968-69-ல் ரூ. 40 கோடியாக இருந்த வருவாயானது

1996 ஆகஸ்ட் 10]

இத்துறையின் தீவிரமான மேற்பார்வையினாலும், விழிப்புணர்வினாலும் 1995–96-ம் நிதியாண்டில் ரூ. 748.50 கோடியாக உயர்ந்திருக்கிறது.

7. இந்திய முத்திரைச் சட்டத்தின் பிரிவு 47(ஏ)-ன் கீழ் வரும் இனங்கள் :

முத்திரைச் சட்டத்தின்படி பத்திரங்களைப் பதிய வருபவர்கள் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் உண்மையான மதிப்பை குறிப்பிட வேண்டும். சொத்தின் சரியான சந்தை மதிப்பு, பத்திரத்தில் உண்மையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதைத் தெரிந்து கொள்ள வழிகாட்டி மதிப்பு பதிவேட்டை வைத்து சரிபார்க்கின்றனர். பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பிற்கும், வழிகாட்டி பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள மதிப்பிற்கும், இடையே வேறுபாடு ஏதுமிருந்து, பத்திரம் பதிய வருபவர் கூடுதல் முத்திரைத் தீர்வையை செலுத்த மறுத்தால், இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47(ஏ)-ன் கீழ், அச்சொத்தின் உண்மையான சந்தை மதிப்பை தீர்மானிப்பதற்கு பத்திரப் பதிவு அதிகாரி, அந்த பத்திரத்தை தனித்துணை ஆட்சியர் (முத்திரை)-க்கு அனுப்பி வைப்பார். செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வையை தனித்துணை ஆட்சியர் நிர்ணயிக்கிறார். அவ்வாறு சட்டப் பிரிவு 47(ஏ)-ன் கீழ் தனித்துணை ஆட்சியர் நிர்ணயம் செய்வதால் பாதிக்கப்பட்டவர்கள் துணை நீதிமன்றங்களில் முறையீடு செய்யலாம்.

மேற்கண்ட தனித்துணை ஆட்சியர் (முத்திரை) 1995–96 ஆம் ஆண்டு, 60448 வழக்குகளை முடித்து ரூ. 18.40 கோடி வருவாயை ஈட்டியுள்ளனர். கீழ்க்கண்ட இடங்களில் தனித்துணை ஆட்சியர் (முத்திரை) செயல்படுகின்றனர் :

1. சென்னை
2. வேலூர்
3. கடலூர்
4. தஞ்சாவூர்
5. திருச்சிராப்பள்ளி
6. சேலம்
7. கோயம்புத்தூர்
8. மதுரை
9. தூத்துக்குடி
10. விருதுநகர்
11. திருநெல்வேலி

மேற்படி அலுவலர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட மாவட்டங்கள் தோறும் சுற்றுப்பயணம் செய்து, சொத்தின் சந்தை மதிப்பை நிர்ணயித்து செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வை போதுமானதா, குறைவானதா என்பதைக் கண்டறிந்து மதிப்பு நிர்ணயம் செய்து வருகின்றனர்.

8. கட்டிடங்களைப் பார்வையிடுதல்:

வீடு மற்றும் கட்டிடங்கள் போன்ற அசையாச் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்களில் கட்டிட அளவுகளை மதிப்புக் குறைவு செய்து அதனால் அரசுக்கு வரக்கூடிய முத்திரை வருவாய் மற்றும் பதிவுக் கட்டணங்களை ஏமாற்றும் வகையில் ஆவணதாரர்கள் பெரும்பாலோர் செய்து வந்தனர். இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 27-இன்படி கைமாறும் சொத்தின் உண்மை நிலைகள் முழுமையாகக் கொடுக்கப்பட வேண்டும் என்பது சட்டமாகும். இருப்பினும் இதனை ஏமாற்றும் வகையில் மேற்கண்ட செயல்கள் நடந்து வந்தன. அதனைத் தடுக்கும் வகையில் புலனாய்வுக்குழு என்ற ஒரு அமைப்பினை அரசு ஏற்படுத்தி உள்ளது. அதன்படி மேற்படி புலனாய்வுப் பிரிவு ஒரு கூடுதல் பதிவுத்துறைத் தலைவரின் தலைமையில் 4 மாவட்டப் பதிவாளர்களையும் இரு உதவி செயற்பொறியாளர்களையும் கொண்டு இயங்குகிறது. மேலும், சேலம், தஞ்சாவூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி மண்டலங்கட்கு 1 மாவட்டப் பதிவாளர் நிலையில் 4 மாவட்டப் பதிவாளர்கள் (புலனாய்வு) மற்றும் பணியாளர்கள் செயல்பட்டு வருகிறார்கள். இவர்களுடன் நிர்வாக மாவட்டப் பதிவாளர்கள் மற்றும் தணிக்கை மாவட்ட பதிவாளர்கள் ஆகியோர்களுக்கு கட்டிட களப்பணி செய்ய அதிகாரம் வழங்கப்படுகின்றது.

80,043 வழக்குகளில் 31-3-1996 முடிய ரூ. 17.26 கோடிக்கு முத்திரைத் தீர்வை ஏய்ப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கண்டுபிடிக்கப்பட்ட தொகையில் கணிசமான தொகை உச்ச நீதிமன்றத்தில் சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்புக்கு எதிராக அரசு தொடுத்துள்ள வழக்கில் முடிவான தீர்ப்பாணையை எதிர்நோக்கி வசூலிக்க முடியாத நிலையில் உள்ளது. அடுக்குமாடி கட்டிட உரிமையாளர்கள் அடுக்கு மாடிகள் விற்பனை செய்வதை மறைத்து அதன் மூலம் அரசுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் மூலம் வரவேண்டிய வருவாய் இழப்பினை ஏய்ப்பதின் மீது இந்த உச்ச நீதிமன்ற மேல் முறையீடு

1996 ஆகஸ்ட் 10]

வழக்கு தமிழக மாநில அரசால் அடுக்குமாடிக் கட்டிட விற்பனையாளர்கட்கு எதிராக கோர்வை செய்யப்பட்டுள்ளது.

9. முத்திரைத் தீர்வை மீதான மேல்வரி:

விற்பனை, பரிவர்த்தனை, நன்கொடை, உடைமை உரிமையுடன் கூடிய அடமானம், அதன் மாற்றம் நிலையான குத்தகை தொடர்பாக ஆவணங்களைப் பொறுத்த வரையில் முத்திரைத் தாள் தீர்வையுடன் 5 சதவீதம் மேல்வரி கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளைப் பொறுத்தவரை மேல்வரியாக வசூலிக்கப்படும் தொகையில் 10 சதவீத தொகையை வசூல் கட்டணமாக, இத்துறை எடுத்துக்கொண்டு எஞ்சியுள்ள 90 சதவிகித தொகை மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் வழங்கப்படுகிறது. அதேபோல் நகரப் பஞ்சாயத்துக்கள், உள்ளாட்சி மன்றங்களுக்கு சம்பந்தப்பட்ட மேல்வரி வசூலில் 3 சதவீதம் இத்துறை வசூல் கட்டணமாக எடுத்துக் கொள்கிறது. மீதமுள்ள 97 சதவிகிதம் மேல்வரி சம்பந்தப்பட்ட நகரப் பஞ்சாயத்துக்களுக்கும், உள்ளாட்சி மன்றங்களுக்கும் வழங்கப்படுகிறது.

சென்னை உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாளரால் முத்திரைத் தாட்கள் விற்பனை:

1994-95 மற்றும் *1995-96* முத்திரைத்தாட்களின் வரவு-செலவு விவரம் :-

	கணக்குத் தலைப்பு.	*1994-95.*	*1995-96.*
		(ரூபாய் லட்சத்தில்).	
1.	நீதித்துறை சாரா முத்திரைத் தாள்கள்.	*43,528.30*	*47,688.43*
2.	நீதித்துறை சார்ந்த முத்திரைத் தாள்கள்.	*2,911.92*	*3,093.30*
3.	உண்டியல் முத்திரைத்தாள்கள்	*2.64*	*118.15*
4.	ஒட்டு முத்திரை வில்லைகள்	*1,008.09*	*1,269.71*
5.	பல்வகை வரவு	*14,020.20*	*23,308.02*
	பெரு மொத்த வரவுகள்	***61,471.15***	***75,477.61***

TRUTH ALONE TRIUMPHS

[1996 ஆகஸ்ட் 10

கழிப்பு - திருப்பி செலுத்தியவை

கணக்குத் தலைப்பு	1994–95	1995–96)
	(ரூபாய் லட்சத்தில்)	
1. உள்ளாட்சி மன்றங்களுக்கு கொடுக்கப்படும் தொகை உட்பட நீதித்துறை சாராதவை	17,476.91	22,086.22
2. நீதித்துறை சார்ந்தவை	148.34	735.86
மொத்தம்	17,625.25	22,822.08
கட்டணங்கள்		
1. முத்திரைத்தாள் விற்பனையில் தள்ளுபடி	152.55	155.14
2. பணியாளர் செலவு	96.00	111.73
3. நாசிக்கிலுள்ள முத்திரைத்தாள் அச்சகத்திற்கு செலுத்தப்பட்ட கட்டணம்	143.72	361.58
4. ஏற்ற இறக்கக் கூலி	5.73	7.50
மொத்த செலவுகள்	398.00	635.95
மொத்த வரவுகள்	61,471.15	75,477.61
மொத்த செலவுகளும் திருப்பி கொடுக்கப்பட்ட தொகையும்	18,023.25	23,458.03
நிகர வரவுகள்	43,447.90	52,019.58